**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள்
**இ.ம.எண். 7/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 115/2019**

1. முகம்மது இலியாஸ்
2. ரசூல் பீவி
3. அப்துல் வாஹீது (இறந்தார்) ..மனுதாரர்கள்/1,2,3 பிரதிவாதிகள்

//எதிர்//

1. முகம்மது ஆரிப் ..1ம் எதிர்மனுதாரர் /வாதி

2. சம்சுல் ஹூதா
3. சிராஜ்தீன்
4. ஷேக் தாவுது
5. செல்லக்கனி ..2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 7 பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 23.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அப்துல் ஹாதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. இளையராஜா, அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தபின் இன்று (10.11.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது வழக்கு கோப்பில் உள்ள 22.06.1940 தேதியிட்ட கரவோலையின் ஜெராக்ஸ் நகலை வழக்கின் இரண்டாம் நிலை (Secondary Evidence) ஆவணமாக குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் மற்றும் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். வாதி அசல் வழக்கை உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் 1 முதல் 15 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 22.06.1940 தேதியிட்ட தாவுதுஷா அவர்கள் குமாரர்கள் முகம்மது ஜக்கரியா, அப்துல்சமது, முகம்மது சாலிஹ், அப்துல் ஹமீது, முகம்மது ஷரீப், குமாரத்தி உம்முசல்மா, தாவுதுஷா அவர்கள் மனைவி சாராபீவி

ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொண்ட கரவோலை பத்திரத்தை கொணரக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு அறிவிப்புக்கொடுக்கப்பட்டு அந்த ஆவணத்தை மறுத்துவிட்ட நிலையில், அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை இரண்டாம் நிலை (Secondary Evidence) ஆவணமாக வழக்கில் பதிந்திட வேண்டிய நிலையில், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டதால் 22.06.1940 தேதியிட்ட கரவோலை ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை, மேற்படி வழக்கில் தங்கள் தரப்பில் 2ம் நிலை ஆவணமாகக் குறியீடு செய்திட வேண்டி இம்மனுவைத் தாக்கல் செய்வதாகவும், வழக்கின் 3ம் பிரதிவாதியாகிய தன் மாமனார் அப்துல் வாஹீது அவர்களின் மனைவி சம்சுல்ஹீதா தன் கணவரைப் புறக்கணித்து தாவா வீட்டை வெளியேறியபோது வழக்கு சொத்தின் ஆவணங்களையும் இன்னும் பிற ஆவணங்களையும் எடுத்துச் சென்றுவிட்டதாகவும், கரவோலையில் தாவா சொத்து முகம்மது ஷரீப், அப்துல் ஹமீது, முகம்மது சாலி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டு அம்மூவரும் குழந்தைபேறு இல்லாமல் காலமானதால் அச்சொத்தினை அடையக்கூடிய வாரிசுதாரர்களான அவர்களின் சகோதரர்களும் சகோதரியும் வா.சா.ஆ. 12, 13, 14 ன் படி 3ம் பிரதிவாதி அப்துல்வாஹிதுக்கு விற்பனை செய்து அதில் அப்துல்வாஹிது தன் பணத்தைக்கொண்டு வீடு கட்டி, அந்த சொத்தினை தன் குமாரர் 1ம் பிரதிவாதி முகம்மது இலியாஸ் அவர்களுக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதாகவும், 22.06.1940 தேதியிட்ட கரவோலை ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை வழக்கின் இரண்டாம் நிலை ஆவணமாகக் குறியீடு செய்திட கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும், எனவே, வழக்கு கோப்பில் உள்ள 22.06.1940 தேதியிட்ட கரவோலையின் ஜெராக்ஸ் நகலை வழக்கின் இரண்டாம் நிலை (Secondary Evidence) ஆவணமாக குறியீடு செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிருரையின் சுருக்கம்:</u>

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் தற்போது புதிதாக 22.06.19640ந் தேதி தாவூத்ஷா குமாரர்கள் ஒரு கரவோலை எழுதிக்கொண்டது போலவும், அதன்படி சொத்தை பிரித்துக்கொண்டது போலவும் கூறியிருப்பது உண்மையல்ல என்றும், கரவோலை சம்மந்தமாக மனுதாரர்

எதிர்வழக்குரையில் கூறவும் இல்லை அந்த கரவோலை உண்மையானதும் அல்ல என்றும், கரவோலை முறையாக எழுதப்பட்டு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு பதிவு செய்யப்படவும் இல்லை என்றும், அந்த முறையிலும் அந்த கரவோலை செல்லத்தக்கதல்ல என்றும், அந்த அடிப்படையில் உரிமை மாற்றம் எதுவும் நிகழவும் இல்லை என்றும், அந்த கரவோலை அமல்படுத்ததப்படவும் இல்லை என்றும், மேலே கூறிய காரணத்தின் அடிப்படையில் சட்டப்படி அந்த கரவோலை முறையாக ஏற்பட்ட ஆவணம் என்ற அடிப்படையில் குறியீடு செய்ய மனுதாரருக்கு உரிமையும் இல்லை என்றும், கரவோலை பத்திரத்தின் அசல் இந்த எதிர்மனுதாரரிடம் இல்லை என்றும், ஏற்கனவே அதை மெமோ மூலம் தெரிவித்துவிட்டதாகவும், 40 வருடங்கள் கழித்து 22.06.1940ல் ஏற்பட்டதாக கூறும் கரவோலையின் ஜெராக்ஸ் நகலை குறியீடு செய்ய வேண்டுமென மனு கொடுத்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், கடந்த 64 வருடங்களாக அந்த கரவோலை இருப்பதாக எங்கேயும் கூறப்படவில்லை என்றும், அது அமல்படுத்தப்படவும் இல்லை என்றும், மேலும் அதன் அசல் 1ம் எதிர்மனுதாரரிடம் இருப்பது போல் கூறியிருப்பது சரியல்ல என்றும், மேலும் பி4, பி5, பி14 ஆகிய கிரய சாசனங்கள் உண்மையென மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், தாவா சர்வே நம்பரில் உள்ள வீடு சமது அவர்களால் கட்டப்பட்டதாகும் என்றும், அவருடைய ஒரே வாரிசு சம்சுல்குதா ஆவார் என்றும், கரவோலையை அனுசரித்து கிரயம் எதுவும் செய்யப்படவில்லை என்றும், பி15 செட்டில்மெண்ட் பத்திரத்திலும் கரவோலை குறிப்பிடவில்லை என்றும், கரவோலையில் கண்ட மூவருக்கும் குழந்தை இல்லை என்பதை போலவும், சொத்தினை அடையக்கூடிய வாரிசுகளான அவருடைய சகோதரர்களும், சகோதரியும் ஏ12, ஏ13, ஏ14 படி 3ம் பிரதிவாதி அப்துல் வாகீதுக்கு விற்பனை செய்தது என கூறியிருப்பது தவறு என்றும், அப்துல் வாகீது தன் பணத்தை கொண்டு வீடு கட்டவும் இல்லை என்றும், அப்துல் வாகீது 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதில் கண்ட சொத்து விபரமும் சரியல்ல என்றும், மேலே கூறிய காரணங்களை அனுசரித்து மனுவுடன் தாக்கல் செய்துள்ள 22.06.1940ந் தேதிய கரவோலையின் ஜெராக்ஸ் நகலை 2ம் நிலை ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுமென கேட்டிருப்பது சட்டப்படி தவறு என்றும், மேலும் மனுதாரர் மனுவின் அபிடவிட்டில்

22.06.1940ந்தேதியிட்ட கரவோலை பத்திரம் என்று தெரிவித்துவிட்டு அபிடவிட் பக்கம் 4 மற்றும் மனுவின் ஆவண விபர காலத்தில் 26.06.1940 என தெரிவித்துள்ளது அந்த ஆவணம் மோசடி ஆவணம் என்பது தெரியவருகிறது என்றும், எனவே, மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**தீர்வு**

5. மனுதாரர் தரப்பில், கடந்த 22.06.1940 தேதியிட்ட தாவுதுஷா அவர்கள் குமாரர்கள் முகம்மது ஜக்கரியா, அப்துல் சமது, முகம்மது சாலிஹ், அப்துல் ஹமீது, முகம்மது ஷரீப், குமாரத்தி உம்முசல்மா, தாவுதுஷா அவர்கள் மனைவி சாராபீவி ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொண்ட பாக கரவோலை பத்திரத்தை கொணரக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அந்த ஆவணத்தை மறுத்துவிட்ட நிலையில் அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை 2ம் நிலை ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கின் 3ம் பிரதிவாதியாகிய தனது மாமனார் அப்துல் வாஹீது அவர்களின் மனைவி சம்சுல்குதா அவரது கணவரை புறக்கணித்து தாவா வீட்டை விட்டு வெளியேறிய போது வழக்கு சொத்தின் ஆவணங்களையும் இன்னும் பிற ஆவணங்களையும் எடுத்து சென்று விட்டார் என்றும், மேற்படி கரவோலையில் தாவாசொத்து முகம்மது ஷரீப், அப்துல் ஹமீது, முகம்மது சாலிக் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டு மூவரும் குழந்தைபேறு இல்லாமல் காலமானதால் அந்த சொத்தினை அடையக்கூடிய வாரிசுதாரர்களான அவர்களின் சகோதரரும் சகோதரியும் வா.சா.ஆ.12, 13, 14 ன் படி 3ம் பிரதிவாதி அப்துல் வாஹீதுக்கு விற்பனை செய்து அதில் அப்துல்வாஹீது தன் பணத்தைக்கொண்டு வீடு கட்டி அந்த சொத்தினை தனது குமாரர் 1ம் பிரதிவாதி முகம்மது இலியாஸ் அவர்களுக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றும், எனவே மேற்படி கரவோலை ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை இந்த வழக்கின் 2ம் நிலை ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுமாறு கோரப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், கடந்த 22.06.1940 அன்று தாவுதுஷா குமாரர்கள் ஒரு கரவோலை எழுதிக்கொண்டதாக சொல்வது உண்மையல்ல என்றும், கரவோலை முறையாக எழுதப்பட்டு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு பதிவுசெய்யப்படவும் இல்லை என்பதால் இந்த கரவோலை செல்லத்தக்கதல்ல. கரவோலை பத்திரத்தின் அசல் இந்த எதிர்மனுதாரரிடம் இல்லை என்றும், கடந்த 64 வருடங்களாக அந்த கரவோலை இருப்பதாக எங்கேயும் கூறப்படவில்லை என்றும், கரவோலை சம்மந்தமாக பல விஷயங்களை மனுவில் சொல்லியிருப்பது உண்மையல்ல. மேற்படி பி.வா.சா. 4, பி.வா.சா. 5, பி.வா.சா. 14 ஆகியவைகள் உண்மை என நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலே கூறியுள்ள காரணங்களின் அடிப்படையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர்கள் தரப்பில் கடந்த 22.06.1940 தேதியிட்ட தாவுதுஷா அவர்கள் குமாரர்கள் முகம்மது ஜக்கரியா, அப்துல் சமது, முகம்மது சாலிக், அப்துல் ஹமீது, முகம்மது ஷரீப், குமாரத்தி உம்முசல்மா, தாவுதுஷா அவர்கள் மனைவி சாராபீவி ஆகியோர்கள் ஏற்படுத்திக்கொண்ட பாக கரவோலை பத்திரத்தை கொணரக்கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அந்த ஆவணத்தை மறுத்துவிட்ட நிலையில் அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை 2ம் நிலை ஆவணமாக குறியீடு செய்ய வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதார்கள் தரப்பில், மேற்படி தேதியில் எந்த கரவோலையும் ஏற்படவில்லை என்றும், அந்த கரவோலை முறையாக எழுதப்பட்டு ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு பதிவுசெய்யப்படவும் இல்லை என்றும், எனவே, அந்த கரவோலை செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றும், அந்த கரவோலை பத்திரத்தின் அசல் இந்த எதிர்மனுதாரரிடம் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

9. இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65 ஆனது எந்த சந்தர்ப்பங்களில் ஆவணங்கள் சம்மந்தப்பட்ட இரண்டாந்தர சாட்சியம் கொடுக்கப்படலாம் என கூறுகிறது. அதில் உட்பிரிவு அ–வானது மூல ஆவணம் எவருக்கு எதிராக நிரூபிக்க

முற்படபடுகிறதோ அவரிடம் அந்த மூல ஆவணம் இருக்கும்போது அல்லது உட்பிரிவு ஆ–ஆனது அந்த மூல ஆவணத்தில் உள்ளது எவருக்கு எதிராக நிரூபிக்கப்படுகிறதோ அவர் அல்லது அவரது முகவர் எழுத்துமூலமாக ஏற்றுக்கொண்டதாக நிரூபிக்கப்பட்டிருக்கும்போது அதனை இரண்டாம்நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளலாம் என கூறியுள்ளது. மனுதாரரால் கடந்த 22.06.1940 அன்று தாவுதுஷா குமாரர்களிடையே ஒரு கரவோலை பத்திரம் எழுதப்பட்டதாகவும், அந்த கரவோலை பத்திரத்தின் அசல் 1ம் எதிர்மனுதாரரிடம் உள்ளதாகவும் அதை கொணரக்கோரி அறிவிப்பு கொடுத்ததாகவும், அந்த ஆவணத்தை 1ம் எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டிருந்தாலோ அந்த ஆவணத்தின் அசல் தன்னிடம் உள்ளது என்பதை மறுக்காமல் இருந்தாலோ மனுதாரர் மேற்படி ஆவணத்தின் நகலை இரண்டாந்தர சாட்சியமாக தாக்கல் செய்ய இயலும். ஆனால் 1ம் எதிர்மனுதாரரரால் மேற்படி ஆவணம் ஏற்பட்டது என்பதை மறுத்திருக்கும் நிலையில் அந்த ஆவணத்தின் நகலை இரண்டாந்தர சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலாது. மேலும், மேற்படி பாக கரவோலையானது இந்திய பதிவுச்சட்டம் பிரிவு 17ன் படி முறையான முத்திரைத்தாளில் எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள கரவோலை பத்திரத்தின் நகலினை பரிசீலனை செய்கையில் அந்த ஆவணம் முத்திரைத்தாளில் எழுதப்படவும் இல்லை. முறையாக பதிவுச்செய்யப்படவும் இல்லை. இரண்டாம் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோரும் அசலானது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணமாக இருந்தால் மட்டுமே அந்த ஆவணத்தின் நகலை இரண்டாம் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள இயலும். ஆனால், மனுதாரர் கோரும் ஆவணத்தின் அசலை தாக்கல் செய்திருந்தாலே அந்த ஆவணம் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை. அவ்வாறு உள்ள நிலையில் அந்த ஆவணத்தின் நகலை இரண்டாந்தர சாட்சியமாக ஏற்றுக்கொள்ளகோரி மனுதாரர் கோருவது ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 10.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.10 16:57:39 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு:**

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.11.10 16:57:45 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**